2005 ஏப்ரல் 6]

கொடுக்க ஆவன செய்யப்படும் என்பதையும், திருவோணம் ஒன்றியம், அக்கரை வட்டம் ஊராட்சியில் கடந்த சனவரி மற்றும் மார்ச் மாதங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, அங்குள்ள கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், தடுப்பூசிப் பணிகள் மற்றும் இதர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புற மக்கள் நலனுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பு நிதியாண்டில் 60 இலட்சம் கால்நடைகள் பயனடையும் வகையில், 5,005 முகாம்கள் நடத்திட, 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, நடப்பு நிதியாண்டிலும் திருவோணம் ஒன்றியம் அக்கரை வட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகள் பயனடையும் வகையில், அங்கு கால்நடைப் பாதுகாப்பு முகாம் நடத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. ஏழுமலை.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, என்னுடைய தொகுதியான செஞ்சியில், தையூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரவர்கள் தொகுதிகளுக்கெல்லாம் தனித்தனியாகக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 310, திரு. டி. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

310—

மீனவர் பயிற்சி நிலையம்

***34899—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் பகுதியிலுள்ள மீனவர் பயிற்சி நிலையக் கட்டடம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

[2005 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் உள்ள மீனவர் பயிற்சி நிலையக் கட்டடத்தை 2005–2006 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் செலவில் பழுதுபார்ப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.*

திரு. டி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி நிலையக் கட்டடம், ஏற்கெனவே பழுதடைந்துள்ளதால், அந்த மாணவர்கள் தங்களுடைய பயிற்சியை நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், தற்போது 2005–2006–ல் அதைப் புதிதாகக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்று, ஏற்கெனவே நீரோடி கிராமத்தில் மீனவர்களுடைய 90 வீடுகள் சூறாவளியால் அடித்துச் செல்லப்பட்டு, இன்று ஆண்டுகள் பதினைந்தைத் தாண்டிவிட்டன. அந்த நிலையில், அவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட வீடுகளைக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள், பழுதடைந்துள்ள, அதாவது, சேதம் அடைந்துள்ள வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சுனாமி பேரலையின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் வீடுகளைக் கட்டுவதற்காக இப்போது திட்டங்களைத் தீட்டியிருக்கின்றார்கள். ஒவ்வொரு வீடும் 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பிலே கட்டப்படும் என்றும் கூறியிருக்கின்றார்கள். தகுதியிருப்பின் அவர்களுக்கு நடப்பாண்டிலே வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. டி. மணி.*

திரு. டி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்தத் துறையினுடைய முன்னாள் அமைச்சரவர்கள் நேரில் அந்த இடத்தைப் பார்வையிட்டு, உடனடியாக அந்த வீடுகளைக் கட்டுவதாகச் சொன்னார்கள். அதுபோன்றுதான் இன்றைய மாண்புமிகு*

2005 ஏப்ரல் 6]

மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும், இதை நேரில் கண்டறிந்தவர்கள். இன்று அவர்கள் வெறும் ஓலைக் குடிசைகளிலே குடியிருக்க வேண்டிய துர்பாக்கிய நிலையிருக்கிறது. எனவே, காலந்தாழ்த்தாமல் அந்தப் பகுதியிலே, அந்நிலையைப் போக்குவதற்கு அவர்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டித் தருவதற்கு அவசர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கிராமத்திற்கு நடப்பாண்டிலே நிச்சயமாக வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.டி. பச்சைமால்.

திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சைமன் காலனி பகுதியில் அமைந்துள்ள மீனவர் பயிற்சி நிலையக் கட்டடத்தை, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் குமரி மாவட்டத்திற்கு வருகை தந்தபோது பார்வையிட்டு இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தக் கட்டடத்தைப் புதிதாகக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கியுள்ளார்கள். அதைப்போல உலக வரலாற்றிலே குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முட்டம் மீனவர் கிராமத்தில் 'Boot' திட்டத்திலே மீன்பிடித் துறைமுகம் அமைத்திட ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு குளச்சல் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ரெங்கநாதன்.

திரு. என். ரெங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எங்கெங்கு மீனவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன என்பதையும், அவற்றின் செயல்பாடுகள் தற்போது எவ்விதம் உள்ளன என்பது குறித்தும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 311, திரு. ப. அரசன், *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.*